Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 18 செவ்வாய்க்கிழமை (04-11-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 320

### முல்லைக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் இருந்து

# வெடி மருந்துகளில் ஒரு பகுதியை புலிகள் எடுத்துச் சென்றிருக்கலாம்!

## இராணுவப் பேச்சாளர் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, நவம்பர் 4

முல்லைத்தீவுக் கடலில் நேற்று முன்தினம் தாக்கி அழிக்கப்பட்ட கப்பலில் எடுத்துவரப்பட்ட ஆயிரத்து 500 மெற்றிக் தொன் வெடிமருந்து வகைகளில் 10 சத வீதமானவை விடுதலைப் புலிகளால் இறக்கப்பட்டிருக்கலாம்.

இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தாக்கி அழிக்கப்பட்ட கப்பல் தொடர்பான விவரங்களை தெரிவிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டின் ஆரம்பத்தில், தானியங்கு விமானம் எடுத்த படங்கள் செய்தியாளர்களுக்குக் காட்டப்பட்டன.

இம்மாநாட்டில் கடற்படை, விமானப்படை அதிகாரிகளும் பங்குபற்றினர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கரிப்பட்டமுறிப்பு பகுதியில் மோதல்

வவுனியா, நவ. 4

கனகராயன் குளத்துக்கு அப்பால் கரிப்பட்ட முறிப்பு பகுதியில் படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் புலிகள் தரப்பில் புதியவன் (பெரியசாமி சரவணாசோதி-தருமபுரம்) களப் பலியானதாக புலிகளின் குரல் தெரிவித்தது. (இ-161-3)

## வவுனியாவில் கறுப்புப் பட்டியுடன் மாணவர்கள்

வவுனியா, நவ. 4

'ராகிங்' சம்பவத்தில் உயிரிழந்த பேராதனைப் பல்கலைக் கழக மாணவன் வரப்பிரகாஷுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வவுனியாவில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை நடைபெறுகிறது என்கிறார் கடற்படைத் தளபதி

கொழும்பு, நவ. 4

''முல்லைத்தீவுக் கடல் பகுதியில் தாக்கப்பட்ட கப்பல் எவ்வாறு இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழைந்தது என்பது குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன.''

இப்படி வடக்கு — கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஆயுதக் கப்பல் ஒன்று தொடர்பாக மூன்று நாள்களுக்கு முன்னர் தகவல் கிடைத்திருந்தது. தாக்கப்பட்ட கப்பலும் அந்தக் கப்பலும் ஒன்றுதானா என்பது குறித்து இன்னமும் தெரியவரவில்லை. அது தொடர்பாக விசாரணை நடைபெறுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-21-3)

## யாழ். சிறைச்சாலையில் கிரனேட் குண்டு வெடிப்பு!

### ஐவர் காயம் அடைந்தனர்

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். சிறைச்சாலையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கிரனேட் வெடிப்புச் சம்பவத்தில் சிறைச்சாலை ஊழியர்கள் ஐவர் காயமடைந்தனர்.

நிமால் ஜெயரட்னே, யூ. எஸ். ஸி. குலதுங்க, எஸ். எச். ஏ. ஹமீட், கருணாரட்ன, குருபுந ஆராய்ச்சி ஆகிய 5 பேருமே காயமடைந்தவர்கள் ஆவார்.

இவர்களில் இருவர் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

[இ-5]

## பொருள்கள் ஏற்றிச் சென்ற கப்பல் மீதே தாக்குதல் என்கின்றனர் புலிகள்

வவுனியா, நவ. 4

பொருள்களை ஏற்றிக் கொண்டு சென்ற சமயம் இயந்திரக் கோளாறு காரணமாக முல்லைத்தீவுக் கடற்பகுதியில் தரை தட்டி நின்ற கப்பல் ஒன்றின் மீதே ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சை நடத்தின.

வன்னியில் இருந்து வெளிவரும் ''ஈழநாதம்'' பத்திரிகையை மேற்கோள்காட்டி ''புலிகளின் குரல்'' மேற்கண்டவாறு நேற்றுக்காலை அறிவித்தது.

இந்தச் செய்தியை ஈழநாதம் பத்திரிகை நேற்றுத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாக மேலதிக தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (இ-164-3)

## கிளிநொச்சியிலிருந்து தொடர் ஷெல் வீச்சு!

வவுனியா, நவ. 4

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாக 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

சரமாரியான ஷெல் தாக்குதல்கள் நேற்றுப் பகலும் தொடர்ந்ததாகவும் —

சேத விவரங்கள் தெரியவரவில்லை என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-164)

## வன்னியில் பெரும் மழை

வவுனியா, நவ. 4

வன்னியில் தொடரும் பெரும்மழை காரணமாக வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியில் உள்ள பெரிய குளங்களில் ஒன்றான உடையார்கட்டுக்குளம் உடைப்பெடுத்துள்ளதாகவும்—

இதனால் அக்குளத்தை அண்டிய வயல்கள், குடிமனைகள் வெள்ளத்தால் நிரம்பியுள்ளதாகவும் — வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

93 ஆம் ஆண்டு இந்தக் குளம் உடைப்பெடுத்த சமயம் அங்கு 5 அடி உயரத்துக்கு அணை ஒன்று கட்டப்பட்டிருந்ததாகவும் —

தற்சமயம் அந்த அணை உடைப்பெடுத்துள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

(இ-164-3)

## குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் பணியில் ஐ. நா. ஈடுபட முடியுமா?

### ஒப்பந்தத்தில் இலங்கை இன்னும் கைச்சாத்திடவில்லை

கொழும்பு, நவ. 4

ஆள்களுக்கு எதிரான மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான சர்வதேச உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடாத நிலையில் —

குடாநாட்டில் உள்ள மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட நிபுணர்கள் ஈடுபடுவது சாத்தியமானதா?

மேற்கண்டவாறு கொழும்புச் செய்தி வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரியான ஜேர்காட் போர்ன்மன் குடாநாட்டின் அவசரத் தேவையை உணர்ந்து அடுத்த 10 வாரத்தில் இங்கு மிதிவெடிகளையும், கண்ணிவெடிகளையும் அகற்ற ... செய்வதாக உறுதி கூறியிருந்தார்.

இதே நேரம் — இலங்கை வெளிவிவகார அமைச்சு கண்ணிகளை அகற்றுவது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை, இவரின் செயற்பாடு இடம்பெறுமா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

'ஆள் கொல்லி மிதிவெடிகள் கண்ணிகள் ... காணிக்கப்படக்கூடிய தடை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்வு நினைவு நாள் நிகழ்வுகள் உலக நாடுகளில்!

வவுனியா, நவ. 4

குடாநாட்டில் இடம்பெற்ற மாபெரும் இடம்பெயர்வின் இரண்டாம் ஆண்டை நினைவு கூரும் வகையில் பல நாடுகளில் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் மாபெரும் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. தமிழர் நிலை குறித்துத் துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.

பாரிஸில் உள்ள வரலாற்றுப் புகழ் மிக்க பிளேஸ்டிலாபாட் நகரில் ஏராளமான தமிழ் மக்கள் கூடி மெழுகுவர்த்தி ஏற்றி விழிப்புப் போராட்டம் நடத்தினர். கடந்த 30 ஆம் திகதி மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை இப்போராட்டம் நடத்தப்பட்டது.

சுவிஸில் உள்ள உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் பிரெஞ்சு, டச்சு மொழிகளில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

## கஞ்சிகுடிச்சாறு பகுதியில் மோதல்

கஞ்சிகுடிச்சாறு பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

இந்த மோதலில் மூன்று புலி உறுப்பினர்கள் இறந்ததாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை ஐக்கிய கழகம்
## பொன்விழா - 97

கரபந்தாட்ட, எறிபந்தாட்ட, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நடைபெறும் திகதி, இடம், கழகங்களுக்கு தனித்தனியாக அறிவிக்கப்படும். 5-11-97 வரை விண்ணப்பிக்கலாம்.

(50969) தலைவர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அன்னலட்சுமி பொன்னம்பலம்

(7 ஆம் வட்டாரம், வேலணை மேற்கு)

தோற்றம்: 15 — 07 — 1923 மறைவு: 05 — 10 — 1997

திதி: சதுர்த்தி

அன்பின் திருவுருவே
அருமை அம்மாவே
உன்னைப் பிரிந்து எமதுள்ளம்
வாடுதம்மா
நின் நினைவு எம் மனதில்
நிலைத்தே நிற்கும் அம்மா!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(50967)


## பட்டிமன்ற சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், நவ. 4

எஸ். எம் பெர்னாண்டோ ஆதரவில் சுன்னாகம் றோட்டரக்ட் கழகம், பாடசாலைகளில் இயங்கும் இன்ரறக்ட் கழக மாணவர்களிடையே நடத்தி வரும் பட்டிமன்றச் சுற்றுப்போட்டித் தொடரில் இருபோட்டிகள் இன்று யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன.

யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி முதலாவது போட்டியிலும்— யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரி அணி மற்றொரு போட்டியிலும் — பங்குபற்றவிருக்கின்றன. (இ-3)

## பரந்தன் ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், நவ. 4

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளம் இன்று தொடக்கம் 9 ஆம் திகதி வரை வழமையான இடத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நுண்கலைப்பீட மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 4

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நுண்கலைப்பீட மாணவர்களுக்கான கூட்டம் நாளை புதன் கிழமை நண்பகல் 12மணிக்கு நுண்கலைப்பீடத்தில் நடைபெறும். (இ-3)

## முதன்மை ஆசிரியர் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். வலயம் - 1க்கு முதன்மை ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 5 ஆம் 6 ஆம் திகதிகளில் திருமலையில் நடைபெற இருந்த பரீட்சையை, யாழ்ப்பாணத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பரீட்சை நடைபெறும் திகதி பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-!)


## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
## 1998 ஆம் ஆண்டுக்கான
## கேள்வி அறிவித்தல்

01-01-1998 தொடக்கம் 30-06-1998 வரையிலான காலப் பகுதிக்குள் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களுக்குக் கேள்விகள் இரு பிரதிகளில் 18-11-1997 ஆம் திகதி காலை 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அதே தினம் நண்பகல் 12.00 மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்.

| கேள்வி விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்விவைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை வல்வெட்டித்துறை | 5,000/- | 500.00 | 100.00 |
| 2. மீன்சந்தை ,, | 5,000/- | 500.00 | 100.00 |
| 3. மாட்டிறைச்சிக்கடை ,, | 15,000/- | 500.00 | 100.00 |
| சேவை: | | | |
| 1. குப்பை கூழங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரப் பெட்டி வாடகைக்கு வழங்கல் (01-01-1998 முதல் 31-12-1998 வரை) | | 250.00 | 100.00 |
| 2. சபையின் உழவு இயந்திரத்தை திருத்துவதற்கான ஒப்பந்தகாரராகப் பதிவு செய்தல்:- | | — | — |

மேலதிக வைப்புப்பணமும் கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 17-11-1997 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பெ. கனகசபாபதி
செயலாளர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை, 27-10-1997. [சி/1959]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கௌரிநாயகி செல்லையா

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பராய் வடக்கில் வசித்து வந்தவருமாகிய திருமதி கௌரிநாயகி செல்லையா 1997-11-03 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தபால் அதிபர் மயில்வாகனம் செல்லம்மா தம்பதிகளின் புத்திரியும், கௌரியம்மா, காலஞ்சென்ற சரவணபவான், கௌரீஸ்வரி (உரும்பராய்), காலஞ் சென்ற மனோன்மணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, செ. ஐயாத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியும், சத்தியபாலன், சத்தியராணி (கனடா), காலஞ்சென்ற மாலினி, பத்மினி (லண்டன்) ஆகியோரின் பெரியதாயாரும், தில்லைநாதனின் (பிரான்ஸ்) மாமியாரும் பிரவீன், பிருந்தா, பிரமன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பராய் வடக்கில் உள்ள இல்லத்தில் நேற்று நடைபெற்று பூதவுடல் இருளன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. கௌரீஸ்வரி (சகோதரி)

உரும்பராய் வடக்கு,
உரும்பராய். (சி/1952)

## திருமதி கோவிந்தபிள்ளை இராசமணி

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது மல்லாவியில் வசித்தவருமாகிய கோவிந்தபிள்ளை இராசமணி 28 - 10 - 97 அன்று மல்லாவியில் காலமானார். அன்னார் காலஞ் சென்ற பொன்னம்பலம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்ற தம்பிப்பிள்ளை கோவிந்தபிள்ளை (இளைப்பாறிய தபால் ஊழியர்) அவரது அன்பு மனைவியும், தர்மலட்சுமி, தேவசேனா, சுந்தராம்பாள், புவனேஸ்வரி, கமலாதேவி, பாலசிங்கம், கனகசிங்கம், நிமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற புவிராசசிங்கம், காலஞ் சென்ற சிதம்பரநாதன், சண்முகலிங்கம், பிரகலாதன், தவராசா, சந்திரகுமாரி, மேரி அலஸ், சோமசேகரம் ஆகியோரது அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29 - 10 - 97 அன்று மல்லாவியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மருமக்கள்
ஆ. பிரகலாதன், க. தவராசா.

82/ 9, கச்சேரிகிழக்கு,
புகையிரத வீதி,
யாழ்ப்பாணம். (சி/ 1956)

## திருமதி தர்மராசா கனகாம்பிகை

நாச்சிமார்கோயிலடி வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் பிளாக்வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மராசா கனகாம்பிகை 03 - 11 - 97 திங்கட்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா (நடுவில்) அவர்களின் மகளும், கந்தசாமி தர்மராசா ப்பத்தர் அவர்களின் மனைவியும், ரவீந்திரன், மகேஸ்வரன், சுரேந்திரன், கலைச்செல்வி ஆகியோரின் தாயாரும், இராசதுரையின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04-11-97 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்;
கணவர்,
பிள்ளைகள்.

பிளாக்வீதி,
சங்கானை. (50965)

## திருமதி சரஸ்வதி ஐயாத்துரை

கொய்யாத்தோட்டம் 39/4, புதுவீதியைச்சேர்ந்த திருமதி சரஸ்வதி ஐயாத்துரை 3-11-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், குலநாயகம் (குவைத்), சின்னராசா (கன்னாதிட்டி), யோகேஸ்வரி, காந்திமதி, ராஜகுலசிங்கம் (ஜேர்மனி), ஈஸ்வரி, இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியபாமா, யோகாம்பிகை, சம்புலிங்கம், ஜெயராசா, சிவலோகநாதன் (புறோமோட்டர்ஸ்), சுமிதா (ஜேர்மனி), தனபாலசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (4-11-97) பிற்பகல் 2 மணிக்கு (பழைய நேரம்) துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஐ. சின்னராசா
[மகன்]

(50972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. அதிகாரிகள் இருவரை ஈராக் திருப்பி அனுப்பியது!

பக்தாத், நவ. 4

ஈராக் வசமுள்ள ஆயுதங்களைப் பரிசோதனை செய்யும் ஐ. நா. குழுவைச் சேர்ந்த இருவரை ஈராக் திருப்பி அனுப்பிவிட்டது.

பாஹ்ரெய்னில் இருந்து விமானம் மூலம் பக்தாத் சென்ற இந்த இரு உறுப்பினர்களையும் உடனேயே திரும்பிச் செல்லுமாறு ஈராக் அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

கடந்த வியாழனன்றும் ஆயுத பரிசோதனைக் குழு உறுப்பினர்களான அமெரிக்கர்கள் இருவரை இதே விமான நிலையத்தில் வைத்து ஈராக் திருப்பி அனுப்பியது.

ஐ. நாவின் ஆயுத பரிசோதனைக் குழுவில் அமெரிக்கர்கள் இடம்பெறக் கூடாது எனத் தெரிவித்து ஆயுத பரிசோதனைக்கு ஈராக் தடைவிதித்திருப்பது தெரிந்ததே.

இந்த விவகாரத்தில் ஏற்பட்டிருக்கும் இழுபறியால் அமெரிக்காவும் ஈராக்கும் நேரடியாக மோதும் ஏது நிலை உருவாகியிருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (ஐ)

## தொழிற்சாலையை செமின் பார்த்தார்

மணிலா, நவ. 4

அமெரிக்காவின் அதிநவீன தொலைத்தொடர்புக் கருவிகள் உற்பத்தி செய்யப்படும் சர்வதேச தொழில் நிறுவனத்தை சீன அதிபர் ஜியாங் செமின் நேற்று முன்தினம் பார்வையிட்டார். நிலையத்துக்குள்ளேயே செயற்கைக் கோள் மூலம் வழிகாட்டப்படும் வாகனங்களையும், மின்அணுக்கள் செலுத்தப்படும் கார் ஒன்றையும் ஓட்டிப்பார்த்து அவர் வியப்படைந்தார். (ஐ-9)

## ஐ. நாவின் 3 தூதர்கள் ஈராக்கிற்குச் செல்வர்

ஆயுத பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள தடை விதித்துள்ளதால் எழுந்துள்ள நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்காக தனது தூதர்கள் மூவரை ஈராக்குக்கு அனுப்ப ஐ. நா. முடிவு செய்துள்ளது.

இதற்கிடையில் —

அதிபர் சதாம் ஹுசேயின் இணக்கத்துக்கு உடன்படாவிடில் படைபலம் பிரயோகிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

அமெரிக்க இராணுவ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளுமாயின் அதனை எவ்வாறு எதிர்கொள்வது குறித்து ஈராக்கிய அமைச்சரவை கூடி விவாதித்துள்ளதாக பக்தாத்தில் இருந்து வெளியான செய்திகள் தெரிவித்தன. (ஐ)

## பக்தாத்தில் உண்ணாவிரதம்

பக்தாத், நவ. 4

ஈராக்கிற்கு எதிராகப் படைப் பலத்தைப் பிரயோகிக்கப் போவதாக அமெரிக்கா அச்சுறுத்தியிருப்பதை ஆட்சேபித்து தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக நான்கு ஈராக்கியர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## எண்ணெய் ஆலையில் தீ

ரெல் அவிவ், நவ. 4

இஸ்ரேலின் தென்பகுதி நகரான அஷ்டொட்டில் நேற்று முன்தினம் காலை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தினைத் தொடர்ந்து அந்த ஆலை தீப்பிடித்து எரியத் தொடங்கியது. உயிர்ச் சேதங்கள் குறித்து உடனடியாகத் தகவல் எதுவும் வெளியாகவில்லை. (ஐ)

## லொறி ஓட்டுநர்கள் பிரான்ஸில் வேலை நிறுத்தம்

பாரிஸ், நவ. 4

பிரான்ஸ் நாட்டு லொறி ஓட்டுநர்கள் சங்கம் நேற்று முன்தினமிரவு முதல் நாடு முழுவதும் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளது. ஊதிய உயர்வு கேட்டு ஓட்டுநர்கள் விடுத்திருந்த காலக்கெடு நேற்று முன்தினத்துடன் முடிவுபெற்றது.

அத்துடன் ஐரோப்பிய நாடுகளை இணைக்கும் சர்வதேச நெடுஞ்சாலைகள் ஊடாக வாகனங்களைச் செல்லவிடாமல் அவர்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர். ஐரோப்பிய நாடுகளில்இருந்து பிரான்ஸிக்குள் லொறிகளை ஓட்டிச் சென்ற நூற்றுக்கணக்கான ஓட்டுநர்கள் வெளியேறமுடியாமல் சிக்கிக்கொண்டுள்ளனர். (ஐ-9)

## டயானாவின் கார் மீது துப்பாக்கிப் பிரயோகம்?

### லண்டன் பத்திரிகை செய்தி

லண்டன், நவ. 4

பிரிட்டனின் உளவுப் பிரிவினர் திட்டமிட்டு நடத்திய ஒரு கொமாண்டோ தாக்குதலிலேயே இளவரசி டயானா ஸ்பென்சர் பலியானார் என்று லண்டன் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

டயானாவும், அவரது நண்பர் டோடி அல்பெயத்தும் பயணம் செய்த மேர்சிடஸ் பென்ஸ் காரை பின்தொடர்ந்து வந்த வாகனம் ஒன்றில் இருந்து டயானாவின் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் —

அதனாலேயே அவரது கார் நிலைதடுமாறி மோதி விபத்துக்குள்ளானது எனவும் அப் பத்திரிகை ரகசிய ஆதாரங்களை மேற்கோள்காட்டித் தெரிவித்துள்ளது.

டயானாவின் காருடன் மற்றொரு வாகனம் உரசியதற்கான ஆதாரங்கள் பொலீஸாரால் ஏற்கனவே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## வீரப்பனுக்கு எதிராக கூட்டு இராணுவ நடவடிக்கை!

### இருமாநில அதிகாரிகளும் நேற்றுக்கூடி ஆராய்வு

சென்னை, நவ. 4

சரணடைவதற்கு வீரப்பன் புதிதாக விதித்த நிபந்தனைகளை தமிழக, கர்நாடக அரசுகள் நிராகரித்து விட்டன.

இதனையடுத்து வீரப்பனைப் பிடிப்பதற்கான இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இராணுவ நடவடிக்கையை எப்போது ஆரம்பிப்பது என்பதைத் தீர்மானிப்பதற்காக தமிழக-கர்நாடக பொலீஸ் மற்றும் அதிரடிப் படை அதிகாரிகள் நேற்று சென்னையில் கூடினர்.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து உடனடியாக செய்தி எதுவும் வெளியாகவில்லை.

''நக்கீரன்'' சஞ்சிகை ஆசிரியர் மூலமாக கடைசியாகத் தமிழக முதல்வருக்கு அனுப்பிய ஒலி நாடாவில் வீரப்பன் தான் சரணடைவதற்குப் புதிதாகப் பல நிபந்தனைகளைத் தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில்

தனக்கு வழங்கப்படும் சிறைவாசம் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்றும் —

தனது உறவினர்களுக்குத் தலா 50 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட வேண்டும். அது குறித்த விவரங்களைத் தெரிவிக்க வசதியாக சிறையில் உள்ள தனது உறவினர் ஒருவரை விடுவித்து காட்டுக்கு அனுப்பி வைக்குமாறும் வீரப்பன் கோரியுள்ளார்.

ஏற்கனவே தமிழக — கர்நாடக அரசுகள் தெரிவித்த எட்டு அம்சத் திட்டத்துடன் இன்னொன்றையும் சேர்த்து அதை ஒன்பது அம்சமாக மாற்றுமாறு மற்றொரு நிபந்தனையையும் வீரப்பன் விதித்துள்ளார். (ஐ)

# தென்னையில் ஏற்படும் கருவண்டுத் தாக்கம் அதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

தென்னையைப் பாதிக்கும் கருவண்டுத் தாக்கம் குறித்து தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரன் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு இது.

**யாழ்.** குடாவில் தென்னை வளரும் பிரதேசங்களில், தென்னையைத் தாக்குகின்ற ஒரு முக்கிய பீடை கருவண்டு ஆகும். இதனைக் காண்டா மிருக வண்டு எனவும் அழைப்பர். விஞ்ஞான முறைப்படி இதற்கு ''ஒறிக்ரஸ் றைனோசிரஸ்'' (Orytcesrhinoceros) எனப் பெயரிட்டுள்ளனர். இதனால் முதிர்ந்த மரங்களுக்கு உண்டாகும் சேதம் சொல்லக் கூடியது அல்ல. என்றாலும், தேங்காயின் உற்பத்தியிலும், இளம் கன்றுகளின் வளர்ச்சியிலும் அதிகமான அளவு பின்னடைவு ஏற்படுகின்றது. சில வேளைகளில் இளம் மரங்களில் விகாரம் ஏற்பட்டு இறப்பு நேரிடுவதுமுண்டு.

தென்னை நாற்று அல்லது கன்றுகளின் முளையில் அதாவது குருத்தின் அடிப்பாகத்தில் மென்மையான பகுதியை முதிர்ந்த வண்டுகள்துளைத்து உண்கின்றன. முதிர்ந்த வண்டு குருத்தின் பாகத்தினைச் சேதப்படுத்துவதனால், ஏற்படும் தனித்தன்மை வாய்ந்த வெட்டுக்குறிகள் (கத்தரிக்கோலால் வெட்டியது மாதிரி) உள்ளதை இலைகள் விரிவடையும் போது அவதானிக்கலாம். வண்டு விளைவித்த சேதத்தினால் நாற்றுக்களில் விருத்தி அடைந்து வரும் இலைகள் அனேகமாகத் தடைப்படும். இதனால் இலைகள் ஒழுங்கின்றியும், விகாரமடைந்தும் உருவாகும்.

### கருவண்டினை இனங்காணுதல்

கருவண்டு சுமார் 30—40 மி. மீ. நீளமும், 20 மி. மீ அகலமும் உடைய பழுப்பு கலந்த கறுப்பு நிற உடலுடையது. தலையில் காண்டா மிருகம் போன்று கூரிய கூம்பிய கொம்பு பின்னோக்கி வளைந்திருக்கும்.

சிதையும் தாவரப் பொருள்கள், உக்கும் தென்னை, பனை மரக்குற்றிகள், சேதன எருக்குவியல்கள், தும்புத்தூள், மரத்தூள் முதலியவற்றில் சிறிய வெள்ளை நிற உருண்டையான முட்டைகளைப் பெண்வண்டு இடும். புழுக்கள் தோன்றி சேதனப் பொருளை உண்ணும். புழுப் பருவம் சுமார் 3 மாதகாலம் நீடிக்கும். முற்றாக வளர்ந்த 60 மி. மீ நீளமான புழுக்களை இலகுவாக அடையாளம் காணலாம். இதனையே நாம் ''கொறவணன் புளு'' என்று அழைக்கின்றோம். இறுதியாக புழுக்கள் கூட்டினை உண்டாக்கும். 3-4 வாரங்களுக்குப் பின்பு, பருவமடைந்த கருவண்டு வெளிவரும்.

யாழ். பிரதேசத்தில் சில இடங்களில் தென்னை மரத்தின் அடியில் மரத்தூள், தும்புச் சோத்தி என்பனவற்றை கொட்டி விடுகின்றார்கள். இது முற்றிலும் தவறான செயல்முறை ஆகும். ஏனெனில் கருவண்டு பல்கிப்பெருகுவதற்கு இது சாதகமாக அமைந்து விடுகின்றது. எனவே இதனை நிறுத்துவது அவசியம். தண்டு உண்டாகியுள்ள இளம் மரங்களில் கருவண்டால் சேதமடைந்த பின்பு, செவ்வண்டுத் தாக்கம் நிகழ வாய்ப்புண்டு. கருவண்டு உண்டாக்கிய காயத்தில் செவ்வண்டு முட்டைகளை இடும். இதனால் செவ்வண்டுத்தாக்கத்தினால் ஏற்படும் சேதம் மரத்தையே இறப்பு விளைவிக்கக்கூடியது.

### கட்டுப்பாட்டு வழிமுறைகள்

கருவண்டினால் சேதம் ஏற்பட்டுள்ளதா? என முதலில் அறிய இளம் தென்னங் கன்றுகள் அல்லது இளங்கன்றுகளை அடிக்கடி சோதனை செய்தல் வேண்டும்.

பருவநிலை வண்டுகளை குருத்துப் பகுதியிலிருந்து உலோகத்தினாலான கூரிய கொழுக்கிகளை உபயோகித்து குத்தி எடுக்கலாம்.

முற்பாதுகாப்பு நடவடிக்கையாக, கருவண்டைக் கட்டுப்படுத்துவதற்கு தோட்டத்தினை நன்கு சுத்தமாகவும் மரக்குற்றிகள், பட்ட தென்னமரங்கள், பனை மரங்கள் என்பவற்றை தோட்டத்திலிருந்து அகற்றியும் வைத்திருத்தல் வேண்டும். முக்கியமாகச் சிதைந்த மரக்குற்றிகளிலும், வேறு தாவரப் பொருள்களிலும், தும்புச்சோத்தி, எருக்குவியல் என்பவற்றிலும் இப் பீடை இனவிருத்தி செய்யும். அவ்வாறான இனவிருத்தி செய்யும் இடங்களை அழிப்பது அவசியம். தென்னங் குற்றிகளை வேலிக்கு எல்லையாகப் பாவித்தால் அவற்றிற்கு தார் அல்லது சொலிக்கணம் பூசுதல் வேண்டும். மூடுபயிரும் வண்டுத் தாக்கத்தினைக் குறைக்கும்.

கருவண்டினால் பரவலாகச் சேதம் ஏற்பட்டிருந்தால், அதாவது தென்னையின் தண்டில் அல்லது குருத்துப் பகுதியில் தும்பு போன்ற சக்கையான பகுதிகள் காணப்படும். கீழ்க் குறிப்பிடப்படும் பூச்சி நாசினிகளில் ஏதாவது ஒன்றை மாதமிருமுறை பரிகாரம் செய்தல் வேண்டும். சிபார்சு செய்யப்பட்ட அளவு பூச்சிநாசினியைக் கைத்தெளிப்பான் உதவியுடன் குருத்துப் பகுதி, வட்டுப்பகுதி முழுவதும் நன்றாக நனையும் வரை விசிற வேண்டும் பவுடரான பூச்சிநாசினியை முளைப்பாகத்தினை நன்றாக விரித்து அதனுள் தூவ வேண்டும்.

★ மொறோகுரோடோபஸ் —10 மி. லீ உடன் 500 மி லீற்றர் தண்ணீருடன் கலந்து விசிறல் (1 மரத்திற்கு

★ மெதமிடபொஸ் — 10 மி. லீ உடன் 500 மி லீற்றர் தண்ணீருடன் கலந்து விசிறல் (1 மரத்திற்கு)

★ அல்ட்றின் 20 மி. லீ உடன் 500 மி லீற்றர் தண்ணீருடன் கலந்து விசிறல் (1 மரத்திற்கு)

★ காபோபியுரான் அல்லது பியூரடான் — 30 கிராம் மணல்மண்ணுடன் (1 கைபிடி அளவு) கலந்து குருத்தினுள் தூவவும்.

சில கிராமப் புறங்களில் பன்னைக் குழைகளையும் குருத்தினுள் வைத்து கட்டுப்படுத்துகின்றனர்.

மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், தெ. ப. சபை, கமநல சேவை நிலையம் நல்லூர் என்ற முகவரியில் ஒவ்வொரு புதன்கிழமையிலும் தொடர்பு கொள்ளலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்குப் பகுதிகளில் ரெலோ கூட்டங்கள் நடத்தும்

அரசின் அதிகார பரவலாக்கற் தீர்வுத் திட்டத்தை நிராகரிப்பதற்கான காரணத்தை விளக்கி ரெலோ அமைப்பு வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கூட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளது.

மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை ஆகியஇடங்களில் மேற்படி கூட்டங்கள் நடைபெறும் என ரெலோ முதல்வர் என். கே. சிவாஜி லிங்கம் தெரிவித்தார்.

(இ-21)

# மிலேச்சத்தனமான 'ராகிங்' கண்டிக்கப்பட வேண்டும்

வலிகாமம் தெற்கு, நவ. 4

பேராதனை பல்கலைக்கழக மாணவன் வரப்பிரகாஷிற்கு மேற்கொள்ளப்பட்ட ராகிங் வதை ஒரு காட்டு மிராண்டித்தனமான செயல்; மிலேச்சத்தனமானதும் கூட. இத்தகைய செயல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை.

ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வலயம் - 2 கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி சூ. ஜெயவீரசிங்கம் தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

கல்விப் பணிப்பாளர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு உயர் கல்விக்காக செல்பவர்கள் நல்ல உள வளப் பண்போடும், நல்ல சிந்தனைகளுடனும் செல்ல வேண்டும்.

வயலில் விளையும் நெல்லுக்கு நீர் எவ்வாறு உதவுகின்றதோ அதே போல கல்வி பயிலும் மாணவர்களுக்கு பாடசாலைக் காலங்களிலேயே ஆசிரியர்கள் வழிகாட்டிகளாக அமைந்து செயற்பட வேண்டும்.

பாடசாலைகளில் மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோரை மதிக்கவும், அவர்களுக்குப் பணிந்து நடக்கவும் ஏற்ற முறையில் மாணவர்களுக்கு நல்லறிவு ஊட்டப்பட வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. காலை நேரப் பிரார்த்தனைகளில் அவற்றைப் போதிக்க வேண்டும்.

பெரும் இன்னல்கள், கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு அவலமான நிலையில் வசதிகளேதுமற்ற நிலையில் நமது மாணவர்கள் கல்வி பயில வேண்டி உள்ளது.

இவ்வாறு பயிலும் மாணவர்கள் எமது நாட்டுக்கு சேவையாற்றக் கூடிய உயர் கல்வியைக் கற்க முன்வரும் வேளைகளில் அவர்களிடம் அன்பும், சாந்தமும் நிலவ வேண்டும். அதற்கு கல்விக் கூடங்களில் குரு -சிஷ்ய உறவு முறை விளங்குவதுடன் பெற்றோர்களின் பங்களிப்பும் அவசியம் இருக்க வேண்டும்—என்றார்.

விழாவில் சிறப்புவிருந்தினர்களாக கல்வி அதிகாரிகளான திருமதிறெஜினா இருதயநாதன், ஆ. வ. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-152)

# கட்டாக்காலி கால்நடைகளால் மானிப்பாய் வடக்கில் தொல்லை

வலிகாமம் தெற்கு, நவ. 4

காலபோக நெற்செய்கை ஆரம்பித்துள்ள மானிப்பாய் வடக்கு, சங்குவேலி போன்ற கிராமங்களில் உள்ள வயல் நிலங்களில்கட்டாக் காலிகால் நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் மேற்கொண்டு வருகின்றார்.

விவசாய சம்மேளனங்களினூடாக கட்டாக்காலிக் கால்நடைகளைப் பிடித்துக் கட்டவும், கால்நடைகளின் சொந்தக் காரரிடமிருந்து குற்றப்பணம் அறவிடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கட்டாக்காலி கால்நடைகளை பிடித்துக் கட்ட வென மானிப்பாய் வடக்கு விவசாய சம்மேளனத்தை சேர்ந்த இருவருக்கு உரிய அனுமதிப் பத்திரங்களை பெரும்பாக உத்தியோகத்தர் வழங்கியுள்ளார்.

(ஐ-152)

# வீதியோரங்களில் மரக்கறி விற்கும் வியாபாரிகள்

## பாசையூர்ப் பகுதியில்

அரியாலை, நவ. 04

பாசையூர்ப் பகுதியில் மரக்கறியை விற்பனை செய்வதற்கு கட்டட வசதியின்மையால் மரக்கறி வியாபாரிகள் வீதியோரங்களில் மரக்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர்.

பாசையூரில் மூன்று கட்டடங்கள் கடற்கரையோரத்தில் உள்ளன. இதில் ஒன்றில் மட்டும் மீன் வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் மரக்கறிகள் மற்றும் பொருள்களை வியாபாரிகள் பெரும் சிரமப்பட்டு வீதியோரங்களில் வைத்து விற்பனை செய்து வருவதைக் காண முடிந்தது.

# விடாமுயற்சியால் உயர்ந்து மதிப்பைப் பெற்றவர்

## அண்ணா நிறுவன அதிபருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், நவ. 4

தனது விடாமுயற்சியாலும் சமூகப் பணிகளாலும் மிகவும் உயர்ந்த மதிப்பைப் பெற்றவர் அண்ணா நிறுவன அதிபர் சு. பொ. நடராசா, சிறு குடிசையிலே குடிசைக் கைத்தொழிலாகத் தொடங்கி இன்று பெரு விருட்சமாக வளர்ந்து இலங்கையின் பல பாகங்களிலும் தனது நிறுவனங்களை ஆரம்பித்து வெற்றி கண்டவர் அவர்.

துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்ணா நிறுவன அதிபர் சு. பொ. நடராசாவின் மணிவிழா அண்மையில் இணுவிலில் நடைபெற்றது.

மணிவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற மணிவிழாவில், மில்க்வைற் அதிபர் க. கனகராசா, சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா மற்றும் நிறுவனப் பணியாளர்கள், பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(இ-5)

# கால் நடைகளை கட்டிவளர்க்கக் கோரிக்கை

அரியாலை, நவ. 4

நாயன்மார்கட்டு, அரியாலை போன்ற பகுதிகளில் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அப்பகுதி கால்நடை அபிவிருத்திச் சங்கம் மக்களை கேட்டுள்ளது.

இப்பகுதியில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப் பட்டிருப்பதால் கால்நடைகளை கட்டிவளர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-17)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் இடங்கள்

யாழ். மாநகரசபைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ. ஆர். வி. தடுப்பு ஊசி போடும் திட்டத்தின் கீழ் —

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் 10.30 மணிவரை வண்ணை காமாட்சி அம்பாள் சன சமூக நிலையத்திலும் —

காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை ஒட்டுமடம் யங்ஸ்ரார் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும்.

நாளை புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் 10.30 மணிவரை நாவாந்துறை சென். நீக்கலஸ் சன சமூக நிலையத்திலும் காலை 11 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை ஆத்திகுடி சன சமூக நிலையத்திலும் —

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் 10.30 மணிவரை நல்லூர் சட்டநாதர் கோயில் வீதி கொண்டலடி சனசமூக நிலையத்திலும், காலை 11 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை திருநெல்வேலி சிவன்கோயிலுக்கு அண்மையில் வைத்து தடுப்பூசி போடப்படும்.

(ஐ-4-15)

# உடலில் ஷெல் சிதறலுடன் வாழ்ந்தவர் ஏற்பினால் மரணம்

பத்து வருடங்களுக்கு முன் ஷெல் வீச்சில் அகப்பட்டு உடலின் ஒரு பகுதியில் ஷெல் சிதறல் துண்டுடன் வாழ்ந்து வந்த குடும்பஸ்தர் ஒருவர் ஏற்பு வலியினால் மரணமானார்.

கரவெட்டி இராசகிராமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கிட்டினர் (வயது 44) என்பவரே கடந்த சனிக்கிழமை யாழ். போதனா மருத்துவ மனையில் உயிரிழந்தார்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ''ஒப்ரேசன் லிபரேசன்'' நடவடிக்கையின் போதே இவர் ஷெல் வீச்சில் அகப்பட்டார். உடலிலிருந்த ஷெல் சிதறல் துண்டை கொழும்பிலுள்ள அரச மருத்துவ மனைமூலமே அகற்றலாமென வைத்திய நிபுணர்கள் ஆலோசனை கூறிய போதும், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வந்த இவருக்கு கொழும்பு சென்று சிகிச்சையை மேற்கொள்ள முடியாத நிலை இருந்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-109)

# கொழும்பில் இருந்து வந்த அபின் கிடைக்கவில்லை

## வைத்தியர்கள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 4

ஆயுள்வேத வைத்தியத்துக்குப் பயன்படுத்தப்படுகின்ற அபின் யாழ். போதனாவைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு இரண்டு மாதங்களாகியும் அது வைத்தியர்களுக்கு இன்னும்வழங்கப்படவில்லை-அவர்கள் யாழ். செயலகம், போதனா வைத்தியசாலை என்று மாறி மாறி அலைந்து திரிந்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கெடுபிடியினால் இன்னும் அபின் அவர்கள் கைக்கு வருவதாக இல்லை.

யாழ். போதனா வைத்தியசாலையில் பொறுப்பாகவுள்ள அதிகாரி அபினை வழங்குவதற்கு அரச அதிபரிடம் செல்லும்படிகூறிசாக்குப் போக்குக் காட்டி மருந்தை விநியோகிக்க மறுப்பதாகக் குறை கூறப்படுகின்றது.

இலங்கையிலுள்ள ஆயுள்வேத வைத்தியர்களுக்கு 1929-ஆம் ஆண்டு 4-ஆம் பிரிவு அபின் விநியோகச்சட்டத்தின்படியும், அனுமதிப் பத்திரத்தின் படியும் அபின் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன்படி யாழ், மாவட்ட வைத்தியர்களுக்கும் யாழ். அரசாங்க அதிபரின் அனுமதிக்கிணங்க யாழ் அரசினர் வைத்தியசாலையில் அபின் வழங்கப்பட்டு வந்தது.

1995ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு அபின் வருவது தடைப்பட்டிருந்தது.

அண்மையில் வைத்தியசாலை அதிகாரிகளது முயற்சியால் அபின் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டது.

கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட அபின் மருந்து வைத்தியர்களிடம் அதற்கான லைசென்ஸ் இருந்தும் கூட விநியோகிக்கப்படாமல் தேங்கிக் கிடப்பது குறித்து ஆயுள்வேதவைத்தியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

ஆயுளவேத வைத்தியத்தில் சிலவகை மருந்துகளைத்தயாரிக்க அபின் பயன்படுத்தப்படுவதால் அபின் கிடைக்கப் பெறாது வைத்தியம் [illegible] பாதிக்கப்படுவதாகச் [illegible] காட்டப்படுகின்றது.

(ஐ-5)

# பட்டி மன்ற இறுதி நிகழ்வு

வலிகாமம் தெற்கு, நவ, 4

சுன்னாகம் றொட்டறக்ட் கழகத்தினரால் எஸ். எம். பெர்னான்டோ நிறுவனத்தின் ஆதரவில் பாடசாலை இன்ரறக்ட் கழக மாணவர்களிடையே நடத்தப்பட்டு வரும் பட்டி மன்றச் சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர் வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சுன்னாகம், றொட்டறக்ட் கழகத் தலைவர் வி. பி சசிவர்ணன் தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

யாழ். றோட்டறிக் கழக இளைஞர் சேவை இயக்குநர் ஏ. பஞ்சலிங்கம், எஸ் எம். பெர்னான்டோ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(ஐ-152)

# மாஹோவில் மா வரும்

கொழும்பு, நவ. 4

யாழ். குடாநாட்டுக்கு இவ்வாரம் 2 ஆயிரத்து 500மெற்றிக் தொன் மா அனுப்பி வைக்கப்பட உள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் [illegible] ஏற்றப்பட்டு வருகின்றது.

(ஐ-9)

# மாதாந்த உதவிப்பணம்

நெல்லியடி, நவ. 4

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்குரிய புரட்டாதி மாதக் கொடுப்பனவு அவ்வப்பகுதி தபாலகங்கள், உபதபாலகங்கள் ஊடாக கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

(ஐ-109)


நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோவில்

கந்தசஷ்டி உற்சவ கால நிகழ்வுகள்

05-11-97 புதன்கிழமை 5ஆம் நாள்

பி. ப. 1-00 மணி தவில், நாதஸ்வரக் கச்சேரி
,, 4-15 மணி வசந்த மண்டபப்பூசையும், சுவாமி வீதி உலாவும்

தவில்:
லயஞான கலாநிதி T. உதயசங்கர்
நாச்சிமார் கோயிலடி K. சிவகுமார்

நாதஸ்வரம்:
கலா பூஷணம் M. P. பாலகிருஷ்ணன்
சங்கீத நாத சாகரம் R. கேதீஸ்வரன்

06 - 11 - 97 வியாழக்கிழமை
(சூரன் போர்)

காலை 8-00 மணி
கருணையம்பதி சிற்பாசாரியார் சின்னராசா அவர்களால் புனரமைக்கப்பட்ட சூரபன்மன் ஊர் உலா.

பி. ப. 3 30 மணி
T. உதயசங்கர், R. கேதீஸ்வரன் குழுவினரின் தவில், நாதஸ்வர கானத்துடன் சூரசங்கார நிகழ்வு நடைபெறும்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

(50890) - பரிபாலன சபையினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வன்னிப் போர் முனையில் இராணுவத்தினர் குவிப்பு!

கொழும்பு, நவ. 4

யாழ்ப்பாணம் — வவுனியா தரை வழிப்பாதை திறப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையின் 3 ஆம் கட்டம்தான் அதன் இறுதிக் கட்ட நடவடிக்கை எனப் பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

மாங்குளம் — கிளிநொச்சியையும் இணைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள 3 ஆம் கட்ட நடவடிக்கைக்காக மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களிலிருந்து மேலதிக இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தில் தீவுப்பகுதி, வலிகாமம் ஆகிய பிரதேசங்களிலிருந்தும் படையினரில் ஒரு தொகுதியினர் யுத்தப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் அப்பிரதேசத்தில் இராணுவத்தினருக்கு புறம்பாக விசேட அதிரடிப் படை, விமானப்படை, கடற்படை, பொலிஸ் என்பனவும் குவிக்கப்பட்டுவருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவம் கைப்பற்றிய இடங்களிலிருந்து முன்னேறிச் செல்லும் போது அப்பிரதேசங்களில் பாதுகாப்பு நிலைகளை பலப்படுத்துவதற்கான பணிகளில் பொலிஸ், கடற்படை, விமானப்படை, விசேட அதிகாரப் படை ஆகியன ஈடுபடுத்தப் படவுள்ளன.

3 ஆம் கட்ட நடவடிக்கை இறுதிக்கட்ட நடவடிக்கை என்பதால் இராணுவ உயர் மட்டத்திலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

(ஐ-21)

# சுதந்திர தினத்துக்கு முன் இலக்கை அடையவேண்டும்!

## படை அதிகாரிகளுக்கு உத்தரவு

கொழும்பு, நவ. 4

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையின் இறுதிக்கட்டத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதத்துக்குள்— 50 ஆவது சுதந்திரப் பொன் விழாவுக்கு முன்— பூர்த்தி செய்து விட வேண்டும் என்று இந்த நடவடிக்கையை முன் எடுக்க நியமிக்கப்பட்ட படை அதிகாரிகளுக்கு அரச உயர் மட்டத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வவுனியாவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடந்த உயர் மட்ட மாநாட்டில் வைத்தே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த மாநாட்டில் பல மணி நேரமாக இந்த நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டதாகவும்—

இம்மாநாட்டில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, இந்த நடவடிக்கைக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் லால் வீரசூரிய ஆகியோர் உட்பட பல உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் 50 ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரியில் கொண்டாடப்படுவதையொட்டியே அதற்கு முன் இந்த நடவடிக்கையை முடிக்க அரசு முயன்றுள்ளது என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன

(ஐ-3)

# புதிதாக அமைக்கப்பட்ட 56 ஆவது படையணி

கொழும்பு, நவ. 4

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்பினருடன் புதிதாக இணைந்துள்ள 56 ஆவது படையணி கடந்த மாதமே உருவாக்கப்பட்டது என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்தப் புதிய படையணிக்கு பிரிகேடியர் சுனில் சந்திரபால தலைமைக் கட்டளை அதிகாரியாவார்.

இந்தப் படையணி தற்சமயம் ''வெற்றி உறுதி'' நடவடிக்கைப் படையினருடன் இணைந்து விட்டதாகவும் —

மூன்றாம் கட்ட நடவடிக்கையில் இந்தப் படையணி முக்கிய பங்கு வகிக்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

# வன்னியில் ஷெல் வீச்சு; மக்கள் இடம்பெயர்வு

வவுனியா, நவ. 4

கரிப்பட்ட முறிப்பு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அயலில் உள்ள கிராமங்கள் மற்றும் இடங்களை நோக்கி கடந்த மூன்று தினங்களாக ஷெல் வீச்சுக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் நூற்றுக்கணக்கான மக்கள் கொட்டுமழையில் நனைந்தபடி பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

(ஐ-9)

## இனப்பிரச்சினையைத் தீர்க்காமல்

# பொருளாதார கொள்கைகளை வகுப்பதில் பிரயோசனமில்லை

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, நவ. 4

இனப்பிரச்சினை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது. இனப்பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வொன்றை முன் வைக்காமல் பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பதில் பயன் எதுவும் இல்லை.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேசிய கைத்தொழில் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்டம் பற்றி விளக்கிக் கூறிய அமைச்சர், அதிகரித்துவரும் பாதுகாப்புச் செலவினங்களை ஈடுசெய்ய பாவனையாளர்கள் மீதும் வர்த்தகர்கள் மீதும் அதிக பளுவை சுமத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லாது — என்றார்.

(ஐ-5)

# முத்திரை தட்டுப்பாடு

நெல்லியடி தபால் நிலையத்தில் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. பாவனையாளர்களுக்கு உதவும் நோக்கில், பருத்தித்துறை தபால் நிலையத்தில் இருந்து பெறப்பட்ட முத்திரைகளே இங்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

(ஐ-109)

# உப்பள ஊழியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 4

உப்பள ஊழியர்களது சம்பளம், நஷ்டஈடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப.10மணிக்கு கச்சேரிவீதியில் உள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஊக்குவிப்பு கொடுப்பனவு

அரியாலை, நவ. 4

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கடந்த 1996 ஆம் ஆண்டுக்கான ஆபத்துக்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவு தற்போது வழங்கப்பட்டு வருவதா சங்கத் தலைவர் சீ. வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இக்கொடுப்பனவு 1996 ஆம் ஆண்டிற்கான முதல் ஆறு மாத காலப்பகுதிக்கே தற்போது வழங்கப்பட்டு வருகிறது. ஏனைய ஆறுமாதங்களுக்கான கொடுப்பனவையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.4

வண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு அதிபர் மு. செல்லையா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். வலயம்-I உதவிக் கல்விப் [illegible] [illegible] கலந்து கொள்வார். (ஐ)


# வெள்ளி விழா
## சிறப்புற வாழ்த்துகின்றோம்

### அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை

வல்லை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் [J. P] அவர்களின் தலைமையில் 13-11-97 அன்று நடைபெறும்.

வெள்ளிவிழா சிறப்புற வல்லை ஆதி வைரவரை வணங்கி வாழ்த்துகின்றோம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

**சுகுணலக்ஷ்மி ஆடை அகம்**

பிரதான வீதி, பருத்தித்துறை.

உரிமையாளர் — நா. தருமராசா

[சி/1949]



# திறப்பு விழா

நிரந்தரமாக பண்டத்தரிப்பில் இயங்கிய

**விஜயன் சலூன்**

மீண்டும் அதே இடத்தில் 05 - 11 - 1997 ஆரம்பிக்கப்படுகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

நிர்வாகி

(50957) விஜயன்



# அறிவித்தல்

02 - 11 - 97 அன்று குலுக்க இருந்த எமது மன்றத்தின் அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக் குலுக்கல் பிற்போடப்பட்டுள்ளது. குலுக்கல் திகதி பின்னர் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

கலை வர்த்தக மாணவர் மன்றம்,
யா. ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

(சி-1951)


# ஓராண்டு நினைவலைகள்



**திருமதி இராசம்மா இராசு**

(ஆதியாமலை, இமையாணன் மேற்கு உடுப்பிட்டி.)

[illegible]ண்ணுலகில்: 20 - 07 - 1947 விண்ணுலகில்: 14 - 11 - 1996

திதி: 04 - 11 - 1997

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
உங்கள் நினைவு எம்மைவிட்டுப் போகாதம்மா.

பிரிவால் துயருறும்:

கணவன்; க. இராசு
பிள்ளைகள்: இராஜேஸ்வரி, தர்மகுலராஜா (சுவிஸ்), இராஜசுலோசனா, கலக்சனா
மருமக்கள்: மு. சுப்பிரமணியம் (லண்டன்), ம. யோகராசா, ஜ. சுபாசினி (சுவிஸ்), பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்
தம்பி: சிறிமுருகன் (சுவிஸ்).

ஆதியாமலை, உடுப்பிட்டி. (50927)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

எக்கோடியன் (120 Bass) ஓர்கன் SK-1 Casio (out Put In put) உள்ளது. பழைய தம்புரா, கிற்றார் உண்டு (பியானோ உட்பட எல்லா இசைக் கருவிகளும் திருத்துபவர்)இல.42, 5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (50956)

பாவித்த நிலையில் உள்ள இரு ஆங்கில தட்டெழுத்து இயந்திரம் Olivety,1 Royal-1 விற்பனைக்குண்டு, தொடர்பு: செயலாளர் சமூக அபிவிருத்திமன்றம் இல.257, ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம் (பார்வையிடும் நேரம் வார நாள்களில் காலை 9மணி முதல் மாலை 4 வரை). (50953)

### வாடகைக்கு

நல்லூர் பருத்தித்துறைவீதியில், நல்லூர் கோயில் முன்புறத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில்இல.272இல் உள்ள மாடி வீடு சகலவசதிகளுடன்வாடகைக்கு உண்டு. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். (50952)

### மணமகன் தேவை

இந்து வெள்ளாள 30 வயதுடைய M Sc படித்த அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: மே/பா 662, உதயன் பணிமனை யாழ்ப்பாணம். (50954)

### கொள்ளி

01-11-97 சஞ்சீவியில் கொள்ளி சிறுகதை வாசித்தீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள். அக்கரைச்சீமையில் நாவல் 25/- நாடகம் எழுதுவது எப்படி? 50/- பரிசளிப்பதற்கு ஏற்றவை. [50931]


## தீயினால் காயம்

தென்மராட்சி, நவ. 4

மண்ணெண்ணெயை உடம்பில் ஊற்றி தீமூட்டிக் கொண்டதாகத் தெரிவித்து எரிகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் ஒருவர் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த பீ. நல்லசேகரம் (வயது 42) என்பவரே எரிகாயங்களுக்கு உள்ளானவராவார். அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டார். (ஐ-117)


## தேவை

யாழ். நகரில் பிரபல விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். யாழ். நகரிலிருந்து நான்கு மைல் சுற்றாடலில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

நற்சான்றுப் பத்திரங்களுடன் காலை 9 மணி ாலை 3 மணிக்குமிடையில் நேரில் வரவும்.

**நியூரோன் மின் களஞ்சியம்**

141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (50692)


## சென். சாள்ஸ் பாடசாலை தினம்

யாழ். சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் பாடசாலைத் தினம் இன்று செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படவுள்ளது. சிறப்பு நிகழ்வாக வண. பிதா சாள்ஸ் கொலின்ஸ் திருப்பலி ஒப்புக் கொடுப்பார். (ஐ)

## ராஜகோபுரம் அமைக்கும் பணி

யாழ்ப்பாணம் திருநெல்வேலி திருவருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு இராஜகோபுரம் அமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இரு மணிக்கூட்டுக் கோபுரங்களுடன் கூடியதாக இந்த இராஜகோபுரம் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
### பளை
# 1998ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

1. பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் உள்ள பின்வரும் இறைச்சிக் கடைகளை 1998-01-01 முதல் 1998-12-31 வரை குத்தகைக்கு எற்று நடத்துவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 12-11-97 ஆம் திகதி மாலை 2 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை உரியபடி படிவக் கட்டணம், கேள்வி வைப்புப் பணம் என்பவற்றைச் செலுத்தி 10-11-97 ஆம் திகதிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 17-11-97 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு திறக்கப்படும்.
2. சித்திரக் கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பங்கை உடன் செலுத்தி மாதாந்தம் 10 சம தவணைப் பணங்களாக மீதித் தொகையைச் செலுத்துதல் வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.
3. போதிய காரணங்களுக்காக கேள்விகளை நிராகரிக்கவோ, இரத்துச் செய்யவோ விசேட ஆணையாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.

| இல. | குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திர பணம் | கேள்விப் பிணைப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | பளை சந்தை மாட்டிறைச்சிக் கடை | 200/- | 500/- | 60, 500/- |
| | பளைச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 200/- | 500/- | 4, 000/- |

பா. செந்தில்நந்தனன்,
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை,
பிரதேசசபைப் பணிமனை,
பளை.
31-10-97

(சி-1954)


# நுளம்பு பெருகியதால் காய்ச்சல் பரவுகிறது

தென்மராட்சி, நவ. 4

இவ் வருடம் நுளம்புகளின் அதிகரிப்பையடுத்து மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக இப்பகுதி ஆஸ்பத்திரிகளின் மலேரியாத் தடுப்புப் பிரிவுகள் மூலம் தெரிய வருகிறது.

சாவகச்சேரி, பளை, மிருசுவில், வரணி, கைதடிபோன்ற வைத்தியசாலைகளில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோரில் நூற்றுக்கு மேற்பட்டோர் மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப்படுவது இரத்தப் பரிசோதனைகள் மூலம் தெரிய வருவதாக தெரிவிக்கப்பட்டது.

மழை குறைந்த அளவே பெய்துள்ள போதிலும் பல இடங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. (ஐ-117)

# யாழ்ப்பாணத்தில் இருந்து பளைக்கு புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து பளை வரையுமான புதிய பஸ் சேவையினை வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பித்துள்ளனர்.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து தினமும் பகல் 1.30 மணிக்குப் புறப்பட்டு பளைக்குச் செல்லும் பஸ் மீண்டும் பளையிலிருந்து பி.ப 4.00 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் செல்லுமென சாலை முகாமையாளர் தெரிவித்தார்,

இதேவேளை முன்னர் நடைபெற்ற யாழ். - பளை பஸ்சேவை வழமை போல் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ - 117)

# றாவளை வாய்க்கால் பாலம் நாளை முதல் திறக்கப்படும்

சாவகச்சேரி, நவ. 4

கேரதீவு — நாவற்குழி வீதியில் சுமார் 5 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட றாவளை வாய்க்கால் பாலம் நாளை புதன் கிழமைமுதல் பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்படவுள்ளது.

இப்பாலம் அமைக்கப்பட்டமையால் இப்பகுதியில் உள்ள விளை நிலங்களில் இவ் வருடம் பெருமளவு நெல்விளைச்சலை எதிர்பார்க்கலாம் என மறவன்புலோ விவசாய சம்மேளனத்தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை யு. என். எச் சீ. ஆர் அமைப்பின் உதவியுடனும் பொதுமக்களின் பங்களிப்புடனும் ரூபா 8 லட்சம் செலவில் இப்பகுதியில் உள்ள குளங்கள் ஆழமாக்கப்பட்டுள்ளன. (ஐ-30)

# சேதமடைந்த மலக்குழிகளை மூட. மாநகரசபை நடவடிக்கை

## பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம்

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். மாநகரசபைப் பகுதியில் சேதமடைந்த மலகூடக் குழிகளை மூடிவிடும் பணியை மேற்கொள்ள மாநகர சுகாதாரப் பிரிவினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

கட்டணம் எதுவும் அறவிடப்படாமல் மாநகர சுகாதாரப் பகுதியினர் இப்பணியைச் செய்வர்.

இது தொடர்பாக மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் பத்திரிகைக் குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மேற்படி திட்டத்தின் ஓர் அங்கமாக உடைந்து வெடிப்பு ஏற்பட்ட மலகூடக் குழிகளை மூடிவிடும் பணி மாநகர சபையினால் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றது. மாநகரசபைப் பகுதியில் வசிக்கும் மக்கள் தங்கள் வதிவிடக் குழிகள் வெடித்திருந்தால் எமக்கு உடன் அறிவித்தால் அதை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இது சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் இல. 107, கண்டி வீதியில் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் உள்ள ''நகர்ப்புற அடிப்படைச் சேவைகள்'' பகுதியுடன் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம் — எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)


## அயிட்டியப்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத்தில்
### தீபாவளியன்று
### அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டவர்களின்
# பெயர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | இல. 6856 | திரு. ப. சுதாகரன், | சிறப்பாவளை, கரணவாய் வடக்கு. |
| 2ஆம் பரிசு | இல. 4656 | திரு. இ. சுயந்தன், | அயிட்டியப்புலம், அல்வாய் மேற்கு. |
| 3ஆம் பரிசு | இல. 5426 | திரு. ம. மதீஸ்வரன், | மலையந்தோட்டம், கொற்றாவத்தை |
| 4ஆம் பரிசு | இல. 208 | திரு. தி. வசந்தன், | இத்தியடி, சமரபாகு, பொலிகண்டி |

## ஆறுதல் பரிசில்கள்

| | | | |
|---|---|---|---|
| இல. | 3312 | - திரு. ஆ. ஆனந்தராசா | கொற்றாவத்தை. |
| இல. | 3460 | - திரு. க. சின்னராசா | சயிக்கிள் கடை. |
| இல. | 357 | - திரு. இ. கெங்காதரம் | V. M. றோட், பருத்தித்துறை. |
| இல. | 312 | - து. அகல்யா | ஆத்தியடி, பருத்தித்துறை. |
| இல. | 2710 | - திரு. சி. சினேஸ்கரன் | இலகடி, உடுப்பிட்டி. |
| இல. | 4689 | - திரு. செ. பாரத் | கட்டைப்புளியடி, அல்வாய் மேற்கு. |
| இல. | 3462 | - திரு. R. செல்வராசா | கடைச்சல்பட்டடை. |
| இல. | 2086 | - ப. விதுர்ஷா | இமையாணன், உடுப்பிட்டி. |
| இல. | 2293 | - திரு. பே. இராமநாதன் | நாதன் இல்லம், கொற்றாவத்தை. |

★ உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றி ★

அயிட்டியப்புலம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய சபை,
கொற்றாவத்தை.

(50961)

## யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
# பரிசுத் தினம்

இடம்: கல்லூரி கலையரங்கம்
காலம்: 04 - 11 - 1997 செவ்வாய்க்கிழமை
பி. ப. 2.00 மணி

பிரதம விருந்தினர்:
**திரு. சி. சிவராசா அவர்கள்**
(கல்விப் பணிப்பாளர் வலயம் 2)

சிறப்பு விருந்தினர்:
**திரு. அ. வி. மயில்வாகனம் அவர்கள்**
(பழைய மாணவன், ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.**

(50964)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச நூலகம்

# உதயன்

## அனுபவம் இதுவா?

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்;

திருகோணமலை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயற்குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இதே வேளை —

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் உதவியை அரசு நாடவுள்ளதாகக் கொழும்பில் பேச்சடிபடுகிறது.

நான்கு தசாப்தங்களைத் தாண்டி விட்ட இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டுமாயின், அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சு நடத்த வேண்டும் என்பது எதிர்க்கட்சிகள் உட்பட்ட சகல அரசியல் அவதானிகளினதும் கருத்தாகும்.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தயார் என்ற நிலைப்பாட்டையே கொண்டுள்ளது; வெளியாலும் சொல்லிக்கொள்கிறது. ஆனால் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேசுவது என்பதில் அதற்குப் பெரிதாக விருப்பமில்லை,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொதுசனத் தொடர்பு சாதனங்களுக்கு, ஊடகங்களுக்கு, அளித்துவரும் செவ்விகளின் போது, மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் குறித்துப் பட்டும் படாமலும் கருத்துச் சொல்லி, ஏதோ ஒரு விதமாகப் பிடிபடாமல் நழுவி விடுகிறார்!

எனினும் கடந்த மாத மத்தியில் சென்னையில் இருந்து வெளிவரும் ''இந்து'' ஆங்கில நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில், மூன்றாவது சக்தி ஒன்றின் உதவியுடனேயே விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வர நேரிடும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

சில இராணுவ இலக்குகளை அடைதல் மற்றும் பல பணிகள் கையில் உள்ளதாகவும், அவை முடிந்த பின்னரே விடுதலைப் புலிகளுடன் பேசலாம் என்ற தொனியிலும் அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடன் குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் தான் பேசவேண்டும் என்ற நேர அட்டவணை வகுக்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

இதன் அர்த்தம், விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்திய நிலையிலேயே அரசு அவர்களுடன் பேச விரும்புகிறது என்பதாகும். அரசின் உண்மையான உள்நோக்கமும் அதுவே.

விடுதலைப் புலிகள் பலவீனப்பட்ட பின்னர் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என்று அரசு எண்ணுகிறது. ஆனால் அத்தகைய எதிர்பார்ப்பு ஏமாற்றமாகவே முடிவடையும் —என்று ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. மகிந்த சமரசிங்கா தெரிவித்துள்ளார்.

இராணுவ இலக்கில் வெற்றியீட்டிய பின்னர்தான் விடுதலைப் புலிகளுடன் பேசுவது என்ற நிலைப்பாடு, எந்த வகையிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வையும் கொண்டு வராது; அமைதியையும் பெற்றுத் தராது.

இன்ன பணியை இந்த நேரத்தில்தான் செய்யவேண்டும் என்றில்லாமல், எப்போதும் செய்யலாம் என்றிருந்தால் எதிர்பார்த்த பலன் கிடைக்க மாட்டாது என்பது சாதாரண அனுபவம்.

இந்த அனுபவம் கூட இல்லாமல் ஓர் அரசினால் நெருக்கடிகளை எவ்வாறு தீர்க்க முடியும்?

---

### தரமற்ற குக்கல் மருந்து!

# இந்திய அரச வர்த்தக நிறுவனம் வழக்குத் தாக்கல் செய்ய முயற்சி

கொழும்பு, நவ. 5

இந்திய அரச வர்த்தக நிறுவனம் இலங்கை அரச வைத்தியர் சங்கத்திடம் 30 கோடி ரூபா நஷ்ட ஈடுகோரி வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளது.

இது குறித்து கூறப்படுவதாவது:-

இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம் இந்திய அரச வர்த்தகநிறுவனத்திடமிருந்து குக்கல் தடுப்பு மருந்தை இறக்குமதி செய்தது.

ஆனால் மேற்படி மருந்து தரமற்றது என இலங்கை அரச வைத்தியர் சங்கம் தெரிவித்து விட்டது.

இந்தக் கருத்து சர்வதேச ரீதியில் நிறுவனத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக அந்த இந்திய நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கை அரச வைத்தியர் சங்கம் ஒருவார காலத்திற்குள் நஷ்ட ஈடு செலுத்தாவிடில் வழக்குத் தாக்கல்செய்யப்படும் என்று அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

''சட்ட நடவடிக்கைக்கு முகம் கொடுக்கத் தயார்; தரமற்ற மருந்து என்பதையும் நிரூபிப்போம்'' என அரச வைத்திய அதிகாரிகள் சங்க பேச்சாளரொருவர் நேற்றிரவு எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(இ-21)

## அறநெறி பாடசாலை

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் இலஞ்சியாரணியம் கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தில் அறநெறிப் பாடசாலை கடந்த விஜயதசமி அன்று ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க. கிருபானந்தக்குருக்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல்வரை நடைபெற்று வருகின்றன. (ஐ-31)

## எழுதுநர்சேவைதரம் II பதவிக்கு குடாநாட்டில் 12 பேர் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 4

பொது எழுதுநர் சேவை தரம் II 'ஆ' பதவிக்கு யாழ். மாவட்டத்தில் 12 பேருக்கு நியமனம் கிடைத்துள்ளது.

இவர்களின் நியமனக் கடிதங்கள் யாழ். செயலகத்துக்குக் கிடைத்துள்ளன என்றும் —

நேரடியாக செயலகத்துக்கு வந்து கடிதத்தைப் பெறுமாறும் —

யாழ். அரச அதிபர் கோரி உள்ளார்.

நியமனம் பெற்றோர் விவரம் வருமாறு:

★ ரி. சண்முகநாதன் — சரசாலை மத்தி.

★ எஸ். கே. அருந்தவராஜா — கண்ணகை அம்மன் கோயில் வீதி, தும்பளை மேற்கு.

★ ரி. சத்தியரூபி — துன்னாலை வடக்கு.

★ பி. குந்தவி — அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

★ ரி. சாந்தி — செம்மணி வீதி, நல்லூர்.

★ ரி. சிவாஜினி — 370/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ எஸ். விஜயலக்ஷ்மி. — நெல்லியடி.

★ ஏ. தவசொரூபன் — 471, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

★ எஸ். சுபத்திராதேவி — 613, நாவலர் வீதி, நல்லூர்.

★ ஏ. பத்மநாசன் — 27, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

★ வி. சுரேஷ்குமார் — 74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

★ எஸ். சரோஜா — முசுமாலை, பளை. (இ-3)

## யாழ்ப்பாணத்திலும் வரப்பிரகாஷ் வாரம்

யாழ்ப்பாணம், நவ. 4

ராகிங் கொடூரத்தால் உயிரிழந்த பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் செ. வரப்பிரகாஷ் ஞாபகார்த்தமாக எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் ஒருவாரகாலம் ''வரப்பிரகாஷ் வாரம்' அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் பிரகடனம் செய்யப்பட்ட இவ்வாரத்தில் இங்குள்ள பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு ஒழுக்கம், மனிதநேயம் பண்பாட்டு விழுமியங்கள் தொடர்பான விளக்கங்களை வழங்கு மாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக வடமாகாண அதிபர் சங்கம்விடுத்துள்ள அறிக்கையில் யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்திற்கு நீங்காத வடுவை ஏற்படுத்திய இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமெனவும் கல்வி நிறுவனங்களில் ராகிங்கை முற்றாகவே நீக்குவது தொடர்பாக சட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## சமய நிகழ்ச்சிகளில்

யாழ்ப்பாணம், நவ. 4

நெல்லியடி கந்தசுவாமி கோயிலில் நடைபெற்றுவரும் கந்தசஷ்டி விழாவின் 5 ஆம் நாளான நாளை புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ''ஆறுமுகம் ஆன பொருள்'' என்ற தலைப்பில் சி. சதாசிவம் உரையாற்றுவார். (ஐ)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 4

வேலணை வங்களாவடி அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி பூசை, ஆராதனைகள் கடந்த ஏழு ஆண்டுகளுக்குப் பின் இவ்வருடம் நடைபெற்றுவருகிறது. தினமும் மாலை 2.00 மணிக்கு அபிஷேகம் நடைபெறுகிறது. (ஐ-30)

## நாளை

**ஐப்பசி 19**

புதன்கிழமை

திதி: பஞ்சமி

பிற்பகல் 4.23 வரை.

நட்சத்திரம்: மூலம்

காலை 6.23 வரை.

பூராடம்

வைகறை 5.55 வரை.

ஸ்கந்த பஞ்சமி

சுபநேரம்: 4.34-6.04

ராகுகாலம்: 12.04-1.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## ரிக்கெற் இன்றி பயணம் செய்த மூன்று அரச ஊழியர்கள்!

### இடையில் இறக்கி விடப்பட்டனர்

தென்மராட்சி, நவ. 4

யாழ்ப்பாணத்தில் இருந்து ரிக்கெற்இன்றி பயணம்செய்த மூன்று அரச ஊழியர்கள் இடை வழியில் பஸ் நடத்துனரால் இறக்கிவிடப்பட்ட சம்பவம் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது.

யாழ். வேம்படி பகுதியில் இருந்து பஸ்ஸில் ஏறிய இம் மூவரும் ரிக்கெற் இன்றி பயணம் செய்ததை நாவற்குழியில் அவதானித்த பஸ் நடத்துனர் ரிக்கெற் எடுக்குமாறு அவர்களிடம் கூறியபோது அவர்கள் வாக்குவாதம் புரிந்ததால் கைதடி அரச மருந்தகத்திற்கு முன்னால் இறக்கிவிடப்பட்டனர்.

(ஐ.117)

## வில்பத்து சரணாலயம் மீண்டும் திறக்கப்படுகிறது

கொழும்பு, நவ. 4

கடந்த பல வருடங்களாக மூடப்பட்டிருந்த வில்பத்து சரணாலயம் மீண்டும் உல்லாசப் பயணிகளுக்காக திறந்து விடப்படவிருக்கிறது.

இந்த சரணாலயம் அமைந்துள்ள காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்கள் உள்ளன என்று கிடைத்த தகவலையடுத்து இந்த சரணாலயம் மூடப்பட்டிருந்தது.

இந்த சரணாலயம் அமைந்துள்ள வவுனியா—மன்னார் வீதி படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியின் அபிவிருத்திக்குத் தடை போடுவது நியாயமா?

> கிழக்கில் இருந்து வெளிவரும் ''ஈஸ்டன் டைம்ஸ்'' மாதமிரு முறை இதழில் வெளியான கட்டுரை இது.

வன்னியில் படையினரின் நடவடிக்கை பூர்த்தியடையும் வரை கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அபிவிருத்திப் பணிகளுக்கு தடைவிதிப்பது தமிழ் மக்களை பொருளாதாரரீதியாகப் பலவீனமாக்கும் செயலாகும்.

வன்னியில் ஜயசிக்குறு ராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ஐந்து மாதங்களைத் தாண்டிவிட்டது. யாழ். குடாநாட்டின் பல ராணுவ முகாம்களை குறைத்துவிட்டு அங்குள்ள துருப்பினரைக் கொண்டு வந்து வன்னிக் களத்தில் விட்டுள்ளனர். படையினர் தரப்பில் அதிக உயிரிழப்பும் ஆயுத இழப்பும் ஏற்பட்டதும் ராணுவ நடவடிக்கை முற்றுப் பெறாமல் தொடர்ச்சியாக்கப்பட்டதும் இந்த வன்னிச்சமர் என்பது நன்கு புலனாகிறது.

மூன்றாம் ஈழப்போரின் போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ். குடா நாட்டை ராணுவத்தினர் அதிக உயிரிழப்பின்றி கைப்பற்றியது போன்று வவுனியா கிளிநொச்சிப் பாதை திறக்கும் விடயத்தையும் நினைத்துக்கொண்டனர்.

டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் வரும் 20 ஆயிரம் படையினரை எதிர்த்து தமது பிரதேசத்தை முற்று கையிடாமல் தக்க வைப்பது விடுதலைப் புலிகளின் பலம் ஓங்கியிருப்பதைக் காட்டுகிறது. அத்துடன் பல ஊடறுப்பு யுத்தங்களையும் செய்து பெரும் தொகையான நவீனரக ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

அடுத்து வரும் மாதங்கள் மழைக்காலமாதலால் அதற்கிடையில் பாதையை திறப்பதில் படையினர் உஷாராக இருக்கின்றனர். ஆனால் படை நகர்வுகளை காலதாமதப்படுத்தும் நடவடிக்கைகளிலேயே விடுதலைப் புலிகள் முழுக்கவனமும் செலுத்துவார்கள். ஜயசிக்குறு நடவடிக்கையின் போது ''செய் அல்லது செத்துமடி'' எனும் பெயரில் நடத்திய தாக்குதலில் கைப்பற்றிய அதிநவீனரக ஆயுதங்களும் மற்றும் ஆட்லெறி, பீரங்கிகளும் பாதுகாப்புப்படையினர் மீது பலமான எதிர்த்தாக்குதல் நடத்த பெரும் உதவியாய் அமைவதோடு வன்னிச்சமர் முடிவுக்கு வராத விடயமாக யுத்தத்தின் தொடர்கதையாக அமையப் போகிறது.

இதே வேளை கிழக்கின் ராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவி செய்வதை வன்னிச்சமர் முடியும் வரை நிறுத்த வேண்டுமென மட்டு-மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரி கேணல் நிஹால் ஜெசூரியா அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கேட்டுள்ளார்.

வன்னியில் நடக்கும் ராணுவ நடவடிக்கைக்கும் கிழககில் ராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு தொண்டர் நிறுவனங்கள் வழங்கும் உதவிகளுக்கும் சம்மந்தம் என்ன?

விதைநெல் ஊக்குவிப்புத் திட்டம், சிறு நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைத்தல் போன்றவற்றில் 'கெயர்' ஸ்தாபனம் ஈடுபட்டுவருகிறது. கடந்த மே மாதம் 15ஆம் திகதிக்குப் பின் தடைவிதிக்கப்பட்டு இருந்தும் பின் பாதுகாப்பு அதிகாரியின் விசேட அனுமதியுடனேயே இதுவரை செயற்பட்டு வந்துள்ளது. ஆனால் இப்போது மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு விதை நெல் வழங்குதல், குளங்கள் புனரமைத்தல் என்பன ''ஜயசிக்குறு'' நடவடிக்கையில் ஈடுபடும் படையினரை எந்தவகையில் பாதிக்கும்என்பதுதான் வியப்பாகஉள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரப் பரவலாக்கல்:

# ஈ. பி. டி. பியின் ஆலோசனைகளை விளக்கி குடாநாட்டில் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 4
அரசாங்கம் முன் வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகத் தமது அமைப்பு முன்வைத்துள்ள திருத்தங்கள், ஆலோசனைகள் குறித்து ஈ. பி. டி. பி. அமைப்பு குடாநாட்டில் கூட்டங்களை நடத்தி விளக்கமளித்து வருகிறது.

இதன் முதலாவது கூட்டம் நெடுந்தீவில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது. ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் இக்கூட்டத்தில் கலந்து தமது அமைப்பின் நிலைப்பாடு குறித்து விளக்கமளித்தார்.

ஊர்காவற்றுறை சண்முகானந்தவித்தியாசாலையில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன், ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன், தீவக அரசியல் பொறுப்பாளர் என். மனோகரன், தீவக உதவிப் பொறுப்பாளர் என். லோகன் ஆகியோர் கலந்து விளக்கமளித்தனர்.

அரசின் யோசனைகளுடன் தமது அமைப்பு சமர்ப்பித்துள்ள 19 பக்க யோசனை குறித்த பல இடங்களில் தொடர்ச்சியாகக் கூட்டங்கள் நடத்தி விளக்கவிருப்பதாக ஈ. பி. டி. பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன் தெரிவித்தார்.

(இ-3)


## பேராதனைக் கல்வி நிலையம்

(இடம் மாற்றப்பட்டுள்ளது)

**No:UP: 256, பலாலிவீதி, கந்தர்மடம் சந்தி**
(அருகில்)

★ G. A. Q. (யாழ்.)
(1997 டிசம்பர் பரீட்சை)
★ B. A. (பேராதனை)
★ வினாத்தாள் பற்றிய விசேடவிரிவுரைகள்
(மெய்யியல் பொருளியல் அரசறிவியல்)

பிரிவு 1 05-11-97 பி. ப. 3-00 மணி
பிரிவு 11 ஆரம்பம்:- 08-11-97 மு. ப. 8-00 பி. ப. 1-00

(50966)



## தொண்டர் ஆசிரியர் கவனத்திற்கு

1992 ஆம் ஆண்டிற்கு முன்பு இருந்து இன்று வரை கடமையில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் திணைக்கள முதல் நியமனக் கடிதப் பிரதி (இருப்பின்) கல்வித்தகைமைகள், பிறந்த திகதி என்பவற்றின் போட்டோப் பிரதிகளை இன்றும் நாளையும், இலங்கை வித்தியாலய அதிபர் சங்கம், ''சிவகிரி'', கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும்.

க, சோமசுந்தரம்
தலைவர்

(50970)



## நன்றி நவிலல்

கடந்த **29 — 10 — 1997** புதன்கிழமை அன்று
சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### நாகரட்ணம் செல்வரட்ணம்

(முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர் R. D. A.)
அவர்களின்

மறைவுச் செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் மலர்வளையம் சமர்ப்பித்தோருக்கும்மற்றும் பலவழிகளிலும்உதவிக்கரம் நீட்டியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.
குறிப்பாகவீதிஅபிவிருத்திஅதிகாரசபை International Business Systems (Pvt)Ltd Colombo யாழ், இந்து மகளிர் கல்லூரி சமூகத்தினருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**— குடும்பத்தினர்.**

40/3, புகையிரத கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம். (50968)



## மரண அறிவித்தல்

### சின்னத்துரை மதியாபரணம்

கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ். பல்கலைக்கழக கணக்காய்வுப் பிரிவைச் சேர்ந்த சின்னத்துரை மதியாபரணம் 3-11-97 அன்று காலமாகி விட்டார்.

இவர் ம. நகுலரதியின் அன்புக் கணவரும், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை மாணவர்களான கோகுலகுமார், யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ம. நகுலரதி
(மனைவி)

பொற்பதி றோட்,
கொக்குவில். (50971)


## வில்பத்து...

(ஏழாம் பக்கத் தொடர்)

பட்டதைத் தொடர்ந்து கடந்த 22 ஆம் திகதி முதல் படையினரும், பொலீஸாரும், கடற்படையினரும் இணைந்து அந்தப் பகுதியில் பாரிய தேடுதல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

அந்தப் பகுதியில் புலிகளின் முகாம்கள் இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளதாக இந்தத் தேடுதலை மேற்கொண்ட புத்தளம் 213ஆவது படைப்பிரிவின் தளபதி கேணல் பராக்கிரம புன்னிப்பிட்டிய அரசாங்கத்துக்குத் தெரிவித்தார்.

இதனை அடுத்தே இந்த சரணாலயத்தைத் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-164-3)


## எமது புதிய வெளியீடுகள்!

சரத்குமார் நக்மா
★ ஜானகிராமன்
சத்தியராஜ்
★ பெரிய மனுஷன்
நாகார்ஜுன்
★ ரட்சகன்
முரளி மீனா
★ பொற்காலம்
பிரகாஷ்ராஜ்
★ விடுகதை
ராஜீவ் கிருஷ்ணா
★ ஆஹா
ராஜேந்திரபிரசாத்
ஊர்வசி
★ வாசுகி

இப்படங்களின்
போஸ்டர்களும்
விற்பனைக்குண்டு.

வீடியோ
CD வெளியீடு
★ பத்தினி

**வீடியோவிமல்**
**யாழ்ப்பாணம்.**
(சி/1966)


# அமெரிக்க தூதரகம் முன் மலேஷியாவில் ஆர்ப்பாட்டம்

## தமிழர் அமைப்பு ஏற்பாடு

வவுனியா, நவ. 4
விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாதப் பட்டியலில் அமெரிக்கா சேர்த்தமையைக் கண்டித்து மலேஷியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலகத் தமிழ் மனித உரிமைகள் அமைப்பின் ஏற்பாட்டில் மலேஷியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெறவிருக்கிறது.

மலேஷியாவில் உள்ள தமிழர்களின் கையொப்பங்களை திரட்டி, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரும் மகஜர் ஒன்று அமெரிக்கத் தூதரகத்திடம் கையளிக்கப்படவிருக்கிறது.

அதே நேரம் — இந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் உள்ள தனித் தமிழர் இயக்கம் அமெரிக்காவைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்து வருகிறது.

(இ-164-3)

## ஒன்று கூடல்

தென்மராட்சி, நவ. 4
தென்மராட்சிக் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான ஒன்று கூடல் நாளை புதன்கிழமை, காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இதில் ஆண்டு இறுதிப் பரீட்சை 1998 க்கான வேலைத்திட்டம், 1998க்கான ஆசிரியர் தேவை போன்றன பற்றி ஆலோசிக்கப்படும்.

அதிபர்கள் ஆண்டு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் புள்ளி விவரங்களை வகுப்பு ரீதியாகவும், பாடரீதியாகவும் கொண்டு வருவதுடன், ஏனைய புள்ளி விவரங்களையும் கொண்டு வருமாறு தென்மராட்சி கோட்டக்கல்வி அலுவலர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(இ-ரி)

## ஆஸி. தூதரக அதிகாரி யாழ். வருகிறார்

கொழும்பு, நவ. 4
கொழும்பில் உள்ள ஆஸ்திரேலியாத் தூதரக 3 ஆவது செயலாளர் ஜெயனே ஒக்கி எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

அவர் 3 நாள்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார் என ஆஸ்திரேலியத் தூதரகப் பேச்சாளரொருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(இ-21)

## ஜனாதிபதியிடம் அறிக்கை

கொழும்பு, நவ. 4
சட்டவிரோதமாக எம். ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்களைக் கொள்வனவு செய்ய முயன்றது தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது

இச்சம்பவம் குறித்து 3பேர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விமானப்படை சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கட்டாய லீவில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

அவர் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-21)

## தமிழ்த்துறை ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், நவ. 4
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆய்வரங்குத் தொடரில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2மணியளவில் 'ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில்மொழிபெயர்ப்பும் கலைச்சொல்லாக்கமும்' என்ற தலைப்பில் தமிழ்த்துறைவிரிவுரையாளர் செல்வி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் ஆய்வுரையை வழங்குவார்.

முகாமைத்துவ மண்டபத்தில் இந்த ஆய்வரங்கு நடைபெறும்.

தமிழியல் ஆர்வலர் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது.

(இ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் நேற்று கறுப்புப்பட்டி அணிந்து பாடசாலைக்கு வந்திருந்தனர்.

தமிழ், முஸ்லிம், சிங்கள பாடசாலைகள் அனைத்திலும் இது இடம் பெற்றது.

(இ-3-164)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

களை இலங்கை கொள்கை அளவில் வரவேற்கிறது. ஆனால் இலங்கையின் தற்போதைய நிலைமை காரணமாக உருவாகியுள்ள பாதுகாப்புத் தேவைகளின் நிமித்தம் இதற்கான ஒப்பந்தத்தில் எதிர்காலத்தில் உடன்படக் கூடிய நிலையில் இலங்கை இல்லை.

''இலங்கை அரசு ஒரு பார்வையாளராக பெல்ஜியம தலைநகரில் நடந்த சர்வதேச மாநாட்டிலும், நோர்வேயின் தலைநகரில் நடந்த ராஜதந்திர மாநாட்டிலும் கலந்து கொண்டது என்று வெளிவிவகார அமைச்சு செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

(இ-3)

## வெடி மருந்து...

(முதலாம் பக்கத் தொடர்)

மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

மூன்று நாள்களுக்கு முன்னர் கப்பல் ஒன்று முல்லைத்தீவு கடற்பகுதிக்குள் மோல்டா தீவுகளின் கொடியுடன் வருவதாகத் தகவல் கிடைத்தது.

அக்கப்பலில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வருவதாகவும் தகவல் கிடைத்தது.

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் இலங்கை விமானப் படையின் தானியங்கி விமானம் ஒன்று அப்பகுதியில் நோட்டமிட்டு படங்களை எடுத்து வந்தது.

கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு படகுகளில் ஏற்றப்படுவதும், கரையில் சில டிரக்குகள் நிற்பதும் அப்படங்கள் மூலம் தெரிய வந்தது.

அதைத் தொடர்ந்து விமானப்படை விமானங்கள் அக்கப்பலைத் தாக்கி அழித்தன. கப்பல் வெடித்துச் சிதறியதால், கப்பலில் குண்டுகள் இருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்கமுடிந்தது.

இந்தக் கப்பல் 80 மீற்றர் நீளமானதாகக் காணப்பட்டதாகவும், எந்த நாட்டைச் சேர்ந்தது என்பதை அறியக் கூடியதாக இருக்கவில்லை என்றும் படங்கள் மூலம் தெரியவந்தது.

கப்பலில் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் வெடிமருந்துகள் இருந்துள்ளன. அவற்றில் 10 சதவீதமானவற்றை புலிகள் அப்புறப்படுத்தியிருக்கலாம்.

கப்பலில் மூன்று அறைகள் இருந்தன. ஆனால் அவற்றில் ஒன்று மட்டுமே திறந்திருந்தது —

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04 - 11 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org